**கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்**

நாள் 26.02.2026

அசல் வழக்கு எண். 164/2023

வா.சா. 1 – ராஜலட்சுமி , க/பெ. முத்துகுமார் ராஜ்

சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

நீங்கள் என்ன படித்து உள்ளீர்கள் என்றால் பி.இ(இ.இ.இ) படித்துள்ளேன். நீங்கள் என்ன வேலை செய்கிறீர்கள் என்றால் நான் தற்போது எந்த வேலையும் செய்யவில்லை. இதற்கு முன்பு எங்கு வேலை பார்த்தீர்கள் என்றால் ஐடி வேலை செய்து வந்தேன். உங்கள் கணவர் எங்கே வேலை பார்க்கிறார் என்றால் அவரும் ஐடி வேலை செய்து வருகிறார். கட்டுமான அக்ரிமெண்ட் எப்போது போட்டார்கள் தெரியுமா என்றால் 21.07.2011 ஆகும். வா.சா.ஆ.1 உள்ள கையொப்பம் உங்களுடையது என்றால் சரிதான். வா.சா.ஆ.2ல் உள்ள கையொப்பம் உங்களுடையது என்றால் சரிதான். ஆவணத்தில் உள்ள சங்கதிகளை படித்து பார்த்து கையொப்பம் போட்டீர்கள் என்றால் சரிதான். கட்டுமான அக்ரிமெண்ட் மற்றும் கிரைய உடன்படிக்கையிலும் சொத்து விவரத்தில் கார் பார்க்கிங் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. கட்டுமான அக்ரிமெண்டில் இருக்கிறது. விற்பனை பத்திரத்தில் இல்லையா என்றால் எனக்கு தெரியாது. மேற்படி இரண்டு ஆவணங்களும் உங்களுடைய முழு மனதுடன் தான் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். பொய்யான சங்கதிகளை சொல்லி வழக்கு தாக்கல் செய்து கொண்டீர்கள் என்றால்

சரியில்லை. வழக்கின் பரிகாரம் உங்களுக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியில்லை. பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியில்லை.

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typo graphed to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- T.Thirumal,
Additional Subordinate Judge,
Kancheepuram